## வரையறுக்கப்பட்ட பீஓசி டிரவல்ஸ் (தனியார்) கம்பனி - 2016

---

வரையறுக்கப்பட்ட பீஓசி டிரவல்ஸ் (தனியார்) கம்பனியின் (''கம்பனி'') 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன.

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் இந்த அறிக்கை வழங்கப்பட்டுள்ளது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான சபையின் பொறுப்பு

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென சபை நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு பணிப்பாளர் சபை (''சபை'') பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன. நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகள் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது.

அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் கம்பனியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி கம்பனியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. சபையினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் சபையினால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்தச் சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

கம்பனியின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சல்களினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.1.1 ஏனைய சட்டரீதியான மற்றும் பிரமாணரீதியான தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 163(2) ஆம் பிரிவின் மூலம் வேண்டப்பட்டவாறு, நான் பின்வருமாறு குறிப்பிடுகின்றேன்.

(அ) அபிப்பிராயத்திற்கான அடிப்படையும் கணக்காய்வின் நோக்கெல்லையும் வரையறைகளும் மேற்குறிப்பிடப்பட்டவாறு உள்ளன.

(ஆ) நான் அபிப்பிராயப்படுவதாவது:

- கணக்காய்விற்கு அவசியமான சகல தகவல்களையும் விளக்கங்களையும் நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என்பதுடன் இதுவரையான எனது பரீட்சிப்பின் மூலம் தென்படுகின்றவாறு முறையான கணக்கீட்டுப் பதிவேடுகள் கம்பனியால் வைத்திருக்கப்படுகின்றன என்பதும்,

- 2007 இன் 07 ஆம் இலக்க கம்பனிகள் அதிகாரச்சட்டத்தின் 151 ஆம் பிரிவின் தேவைப்பாடுகளுடன் கம்பனியினது நிதிக்கூற்றுக்கள் இணங்குகின்றன என்பதும் ஆகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

வரி விதிக்கக்கூடிய வருமானத்தை கணிப்பீடு செய்யும் போது ரூபா 1,091,650 கூட்டுத்தொகையான அவ்வவ்போது ஏற்படுகின்ற பரிசுகள், அனுசரணை போன்ற அனுமதிக்க முடியாத செலவினங்கள் கழிக்கப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டிற்கான வருமான வரி செலவினம் ரூபா 305,662 ஆல் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

#### 2.2.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 122,058,073 மொத்த கடன்பட்டோர் மீதியில் ரூபா 31,148,364 கூட்டுத்தொகையான மீதிகளை நேரடி உறுதிப்படுத்தல் காணப்படாமையினால் சரிபார்க்க முடியாதிருந்தது.

### 2.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

**(அ) சமர்ப்பிக்கப்படாத காசோலைகள்**

மீளாய்வாண்டில் இறுதியிலுள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் ரூபா 1,702,009 பெறுமதியான சமர்ப்பிக்கப்படாத காசோலைகள் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழ் காட்டப்பட்ட ஏனைய செலுத்த வேண்டிய மீதிகளில் உள்ளடக்கப்பட்டிருந்தது. இது ஆறு மாதங்களிற்கு முன்னரும் 2012 தொடக்கம்

2015 வரையான காலப்பகுதியின் போதும் கம்பனியால் வழங்கப்பட்ட முறையே ரூபா 1,598,873 மற்றும் ரூபா 1,590,505 பெறுமதியான காசோலைகளை உள்ளடக்குகின்றது.

**(ஆ) தீர்ப்பனவு செய்யப்படாத மீதிகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) வாடிக்கையாளர்களால் பதிவுசெய்யப்பட்ட சுற்றுலாக்கள் இரத்துச்செய்யப்பட்டு அவர்களால் வழங்கப்பட்ட தொகைகளை உள்ளடக்குவதன் மூலம் செலுத்த வேண்டிய மீள்நிதியிடல் கணக்கை கம்பனி பேணுகின்றது. ஆண்டின் இறுதியிலுள்ளவாறான ரூபா 12,736,429 மொத்த மீதியில் ரூபா 1,237,985 தொகை அரசாங்க நிறுவனங்களிற்குச் செலுத்த வேண்டிய தொகைகளை பிரதிநித்துவப்படுத்தியிருந்தன. கம்பனியானது நியாயமான காலப்பகுதியினுள் வாடிக்கையாளர்களிற்கு மேற்படி மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) கம்பனியானது வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்பட்ட முற்பணம் என அழைக்கப்பட்ட கணக்கை பேணியிருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு இந்தக் கணக்கிலுள்ள மீதி ரூபா 14,680,125 ஆக இருந்தது. மேற்படி மீதியில் ரூபா 7,229,469 தொகை அல்லது 49 சதவீதம் அரசாங்க நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட முற்பணத்தை பிரதிநித்துவப்படுத்துகின்றன. எவ்வாறாயினும், கம்பனியானது நியாயமான காலப்பகுதியினுள் இந்த நீண்டகால நிலுவை மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கையை பின்பற்றியிருக்கவில்லை.

(iii) ரூபா 2,745,918 கூட்டுமொத்தமான நீண்டகால நிலுவையாகவுள்ள செலுத்த வேண்டிய மீதிகள் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன் மீளாய்வாண்டின் போது நானாவித வருமானமாக இனங்காணப்பட்டிருந்தது.

நடைமுறை ஆண்டில் வருமானமாக இனங்காணப்பட்டுள்ள ஐந்து ஆண்டுகளிற்கு மேற்பட்ட சமர்ப்பிக்கப்படாத காசோலைகள், செலுத்த வேண்டிய மீள்நிதியிடல், வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்பட்ட முற்பணம் மற்றும் ஏனைய செலுத்த வேண்டியவைகளின் மீதிகளை அங்கீகரிப்பது கம்பனியின் நடைமுறையொன்றாக உள்ளதென இது தொடர்பில் கம்பனியின் முகாமை அறிவித்திருந்தது. அதற்கிணங்க, 2012 இற்கு முன்னரான மேற்படி மீதிகள் வாடிக்கையாளர்களிற்கு அறவிக்கப்படாமல் வருமானமாக ஏற்கனவே அங்கீகரிக்கப்பட்டிருந்தது.

**(இ) அறவிடப்படாத பெறுமதி சேர் வரி (வற்)**

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4,877,074 தொகையான பெறவேண்டிய வற் மீதியை அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) சிக்கலான மீதிகள்**

மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறு பின்வரும் கடன்பட்டோர் மீதிகள் அவர்களால் உறுதிப்படுத்தப்பட்ட மீதிகளுடன் இணங்கியிருக்கவில்லை.

| கடன்பட்டோர் பெயர் | பேரேட்டுக் கணக்கின் பிரகாரம் மீதி | உறுதிப்படுத்தலின் பிரகாரம் மீதி | வேறுபாடு |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| இலங்கை பாராளுமன்றம் | 2,624,702 | 846,400 | 1,778,302 |
| பிரதம அமைச்சர் அலுவலகம் | 1,323,443 | இல்லை | 1.323,443 |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், கம்பனியின் தொழிற்பாடுகள் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான ரூபா 40.01 மில்லியன் வரிக்கு முன்னரான தேறியலாபத்துடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது ரூபா 33.29 மில்லியன் வரிக்கு முன்னரான தேறிய இலாபத்தை விளைவித்திருந்தமையால் நிதிசார் விளைவுகளில் ரூபா 6.72 மில்லியன் அல்லது 16.79 சதவீத வீழ்ச்சியொன்றை சுட்டிக்காட்டுகின்றது. விற்பனை வருமானம் 2014 ஆம் ஆண்டில் ரூபா 80.4 மில்லியனிலிருந்து மீளாய்வாண்டில் ரூபா 74.48 மில்லியன் வரை குறைவடைந்தமையானது நிதிசார் விளைவுகளில் ஏற்பட்ட இந்த பின்னடைவிற்கு பிரதான காரணமாக பங்களித்திருந்தது.

### 3.2 பகுப்பாய்வு ரீதியான நிதிசார் மீளாய்வு

#### 3.2.1 இலாபத்தன்மை

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய நான்கு ஆண்டுகளில் கம்பனியின் நிதிசார் விளைவுகளின் பொழிப்பை பின்வரும் அட்டவணை சுட்டிக்காட்டுகின்றது.

| | ரூபா "000" இல் | | | | |
|---|---|---|---|---|---|
| **ஆண்டு** | **2016** | **2015** | **2014** | **2013** | **2012** |
| வருமானம் | 74,488 | 72,978 | 80.400 | 73,655 | 67,961 |
| வரிக்கு பின்னரான இலாபம் | 26,517 | 32,745 | 27,020 | 35,045 | 42,674 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

கம்பனியின் இலாபம் 2012 ஆம் ஆண்டில் ரூபா 42.67 மில்லியனிலிருந்து மீளாய்வாண்டின் போது ரூபா 26.51 மில்லியன் வரை அதாவது 37 சதவீதத்தால் குறிப்பிடத்தக்களவு குறைவடைந்திருந்த போதிலும் இந்த இலாபத்தன்மையை அதிகரிப்பதற்கு கம்பனி குறிப்பிடத்தக்களவு கவனம் செலுத்தியிருக்கவில்லை.

#### 3.2.2 குறிப்பிடத்தக்க கணக்கீட்டு விகிதங்கள்

கணக்காய்விற்காக கிடைக்கப்பெற்ற நிதிக்கூற்றுக்கள் மற்றும் தகவல்களின் பிரகாரம், முன்னைய 04 ஆண்டுகளுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான முக்கிய விகிதங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| **விகிதம்** | **2016** | **2015** | **2014** | **2013** | **2012** |
|---|---|---|---|---|---|
| **இலாபத்தன்மை விகிதங்கள் (சதவீதம்)** | | | | | |
| தேறியலாப விகிதம் | 2.3 | 3.0 | 2.6 | 3.9 | 5.7 |
| மொத்தச் சொத்துக்கள் மீதான திரும்பல் | 11 | 15 | 15 | 20 | 28 |
| உரிமை மூலதனம் மீதான திரும்பல் | 15.7 | 21 | 19.5 | 26.7 | 38.9 |
| **செயற்பாட்டு விகிதங்கள்** | | | | | |
| கடன்பட்டோர் புரள்வு விகிதம் (தடவைகளின் எண்ணிக்கை) | 12 | 19 | 17 | 15 | 21 |
| கடன்பட்டோர் புரள்வுக் காலம் (நாட்கள்) | 29 | 19 | 21 | 23 | 17 |
| **திரவத்தன்மை விகிதங்கள் - (தடவைகளின் எண்ணிக்கை)** | | | | | |
| நடைமுறை விகிதம் | 3.53 | 3.83 | 4.7 | 4.26 | 3.35 |
| மொத்தச் சொத்துக்களிற்கான தேறிய நடைமுறைச் சொத்துக்கள் | 0.67 | 0.70 | 0.72 | 0.69 | 0.62 |

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

பிரயாண முகவர், சுற்றுலா செயற்பாட்டாளர், பொது விற்பனை முகவர் ஆகியோரின் வணிகங்களை நடாத்துதல் மற்றும் இலங்கைக்கு வருகைதரும் சுற்றுலா பிரயாணிகள் அல்லது வெளிநாட்டிற்கு பிரயாணம் செய்யும் இலங்கையின் குடியிருப்பாளர்களிற்கு வசதிகளை வழங்குதல் என்பன கம்பனியின் முதன்மை நோக்கங்களாகும். அதற்கிணங்க, மீளாய்வாண்டு மற்றும் கடந்த ஐந்து ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட பிரதான நடவடிக்கைகள் மீதான கம்பனியின் செயலாற்றல் பின்வருமாறுள்ளது.

| | **ஆண்டு** | **2016** | **2015** | **2014** | **2013** | **2012** |
|---|---|---|---|---|---|---|
| **(அ)** | **பொது பிரயாணச் சீட்டுக்கள்** | | | | | |
| | வழங்கப்பட்ட பிரயாணச் சீட்டுக்களின் எண்ணிக்கை | 19,845 | 20,438 | 18,513 | 19,000 | 17,391 |
| | மொத்த வருமானம் (ரூபா. 000) | 1,368,562 | 1,282,015 | 1,257,283 | 1,138,849 | 1,125,507 |
| | மீளளிக்கப்பட்ட விமானச் சீட்டுக்களின் எண்ணிக்கை | 356 | 294 | 324 | 297 | 218 |
| | மீளளிக்கப்பட்ட மொத்த தொகை (ரூபா. 000) | 52,745 | 43,633 | 50,160 | 41,222 | 28,963 |
| **(ஆ)** | **தம்பதிவ சுற்றுலாக்கள்** | | | | | |
| | ஒழுங்குசெய்யப்பட்ட சுற்றுலாக்களின் எண்ணிக்கை | 27 | 22 | 19 | 15 | 20 |
| | மொத்த வருமானம் (ரூபா. 000) | 72,214 | 54,053 | 48,196 | 33,621 | 39,065 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| **(இ)** | **உள்ளூர் (Inbound) சுற்றுலாக்கள்** | | | | | |
| | ஒழுங்குசெய்யப்பட்ட சுற்றுலாக்களின் எண்ணிக்கை | 16 | 25 | 24 | 14 | 27 |
| | மொத்த வருமானம் (ரூபா. 000) | 2,965 | 4,890 | 5,546 | 3,009 | 11,153 |
| **(ஈ)** | **வெளியூர் (outbound) சுற்றுலாக்கள்** | | | | | |
| | பிரயாணம் செய்த பிரயாணிகளின் எண்ணிக்கை | 642 | 520 | 658 | 608 | 591 |
| | மொத்த வருமானம் (ரூபா. 000) | 32,525 | 21,150 | 35,906 | 28,866 | 14,700 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2016 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட விமானச் சீட்டுக்களின் எண்ணிக்கை 3 சதவீதத்தால் குறைவடைந்திருந்தது.

(ii) முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் உள்ளூர் சுற்றுலாக்களின் எண்ணிக்கை 36 சதவீதத்தால் குறிப்பிடத்தக்களவு குறைவடைந்திருந்தது. எவ்வாறாயினும், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் வெளியூர் சுற்றுலாக்களின் எண்ணிக்கை 23 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

(iii) கம்பனியானது 2016 ஆம் ஆண்டின் போது உள்ளூர் சுற்றுலாக்களிற்காக பாரிய கிரயமொன்றை செலவிட்டிருந்ததன் காரணமாக இச்சுற்றுலாக்களின் இலாபத்தன்மை போதுமான மட்டத்தில் இருக்கவில்லை. உள்ளூர் சுற்றுலாக்களின் வருமானம் ரூபா 2,965,264 ஆக இருந்ததுடன் விற்பனைக் கிரயம் ரூபா 2,634,556 ஆக இருந்தது.

வருடாந்த பாதீட்டின் பிரகாரம், கம்பனியானது இந்த நடவடிக்கை மூலம் ரூபா 2,600,000 இலாபமொன்றை ஈட்டுவதற்கு எதிர்பார்த்த போதிலும் உள்ளபடியான இலாபம் ரூபா 330,708 மாத்திரமாகும். அத்துடன் 2015 இல் காணப்பட்ட ரூபா 1,003,795 இலாபத்துடன் ஒப்பிடுகையில் 67 சதவீதத்தால் இது குறைவடைந்திருந்தது.

**4.2 சர்ச்சைத் தன்மையான கொடுக்கல் வாங்கல்கள்**

---

கம்பனியானது 2016 ஆம் ஆண்டின் போது ரூபா 1,814,124 தொகையொன்றை வெளிநாட்டுப் பிரயாண செலவினங்களாக செலவிட்டிருந்தது. 2016 ஆம் ஆண்டின் போது மேற்கொள்ளப்பட்ட உள்ளூர் சுற்றுலா மேம்படுத்தல் நடவடிக்கைகள் தொடர்பான அனைத்து நான்கு நிகழ்ச்சித்திட்டங்களிலும் இரண்டு உத்தியோகத்தர்கள் மாத்திரம் பங்குபற்றியிருந்தமை அவதானிக்கப்பட்டதுடன் இது மொத்த வெளிநாட்டு பிரயாண செலவினங்களில் 74 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது.

**4.3 முகாமைத்துவப் பலவீனங்கள்**

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ரூபா 122,058,073 மொத்த வியாபார கடன்பட்டோர் மீதிகளில் ரூபா 87,895,289 தொகை அல்லது 72 சதவீதம் அரசாங்க நிறுவனங்களிடமிருந்து பெறவேண்டியவைகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்றன. கடன் கொள்கை கையேட்டின்

பிரகாரம், அரசாங்க நிறுவனங்களிற்கு 60 நாட்கள் கடன் காலப்பகுதி வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், வழங்கப்பட்ட கடன் காலப்பகுதியினுள் நிலுவையாகவுள்ள மீதிகளை சேகரிப்பதற்கு கம்பனியால் முடியாதிருந்தது. மொத்த நிலுவை மீதியில் ரூபா 25,182,979 தொகை அல்லது 28 சதவீதம் 90 நாட்களை விஞ்சியிருந்தமை அவதானிக்கப்பட்டது. கம்பனியானது இந்த நீண்டகால நிலுவையாகவுள்ள கடன்பட்டோர் மீதிகளை அறவிடுவதற்கு ஆக்கபூர்வமான நடவடிக்கையை எடுக்காதிருந்தமை மேலும் அவதானிக்கப்பட்டது.

(ii) 2016 ஆம் ஆண்டின் போது, ரூபா 3,065,983 தொகை அறவிடமுடியாக் கடன்களாக கம்பனியால் பதிவழிக்கப்பட்டிருந்தது. இந்த மீதிகளில், 75 சதவீதம் கம்பனியின் நான்கு ஊழியர்களால் செய்யப்பட்ட தனிப்பட்ட கொடுக்கல் வாங்கல்களை பிரதிநித்துவப்படுத்துகின்றன.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் கம்பனியால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், செயல்நடவடிக்கைத் திட்டத்திற்குப் பதிலாக 2016 ஆம் ஆண்டிற்காக வணிகத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருந்தது.

### 5.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2003 யூன் 02 இன் பிடிஎவ்/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 7.4.1 ஆம் பிரிவினால் வேண்டப்பட்டவாறு மீளாய்வாண்டின் போது கம்பனியால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

### 5.3 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதிடப்பட்ட மற்றும் உள்ளபடியான வருமானம் மற்றும் செலவினங்களுக்கிடையில் குறிப்பிடத்தக்களவு முரண்கள் அவதானிக்கப்பட்டமையால் பாதீடானது ஆக்கபூர்வமான முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளிலுள்ள குறைபாடுகள் காலத்திற்கு காலம் கம்பனியின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| கட்டுப்பாட்டு பரப்புக்கள் | | அவதானிப்புக்கள் |
| --- | --- | --- |
| (அ) | பதிவுகள்/ பதிவேடுகளை பேணுதல் | ஒவ்வொரு வாடிக்கையாளரின் பெயரில் பெறவேண்டிய மீதியை பேணுவதற்குப் பதிலாக கம்பனியானது கையாளப்படுகின்ற வாடிக்கையாளர்களின் எண்ணிக்கைக்குரிய ஊழியரின் பெயரிலுள்ள மீதிகளை உள்ளடக்கிய பட்டியலொன்றை பேணியிருந்தது. |
| (ஆ) | வருமானத்தை இனங்காணுதல் | வாடிக்கையாளர்களிடமிருந்து பெறப்பட்ட முற்பணம் மற்றும் வாடிக்கையாளர்களிற்கு செலுத்த வேண்டிய மீள்நிதியிடல்கள் என்பன வாடிக்கையாளர்களிடமிருந்து உறுதிப்படுத்தப்பட்டு பெறப்படாமல் ஐந்து ஆண்டுகள் காலப்பகுதியின் பின்னர் வருமானமாக இனங்காணப்பட்டிருந்தது. |
| (இ) | வாடிக்கையாளர்களிடமிருந்து பெறவேண்டியவைகளின் சேகரிப்பு | அரசாங்க நிறுவனங்களிலிருந்து பெறவேண்டியவைகள் கடன் காலப்பகுதியினுள் சேகரிக்கப்பட்டிருக்கவில்லை. |